# நோயாளி தகவல் படிவம்

PATIENT INFORMATION SHEET

மனநல கழகம் (IMH) என்பது சிங்கப்பூரில் உள்ள ஒரு மேம்பட்ட மனோவியல் மருத்துவமனையாகும். எங்கள் சேவைகளை தொடர்ந்து மேம்படுத்தி, எங்கள் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் நன்கு கவனிக்கப்படுவதை உறுதி செய்கிறோம். ஒவ்வொரு நோயாளியும் தனித்தன்மை வாய்ந்தவர் என்றும் அவருக்கு தனிப்பட்ட தேவைகள், திறன், பண்புகள் மற்றும் நம்பிக்கைகள் உள்ளன என்பதையும் நாங்கள் அறிவோம். எனவே, எங்கள் மருத்துவமனைக்கு வருகைப் புரிபவர்களுக்கும், மருத்துவ ஆலோசனை அல்லது மருத்துவ சிகிச்சை பெற வருபவர்களுக்கும் பயன்மிக்க வசதியான ஓர் அனுபவத்தை வழங்க எங்கள் ஊழியர்கள் அனைவரும் முயற்சி செய்கின்றனர்.

எங்கள் மருத்துவமனை பல்திறன் கொண்ட நிபுணத்துவ குழு கவனிப்பு முறையைக் கையாளுகிறது. உங்கள் சிகிச்சையில் சிறந்த பலனை அடைவதற்காக, எங்கள் மனநல மருத்துவர்கள், மருத்துவ அதிகாரிகள், தாதியர்கள், மருத்துவ நிபுணக்குழுவினர்கள் மற்றும் இதர ஊழியர்கள் அனைவரும் உங்களுடனும் உங்கள் பராமரிப்பாளர்களுடனும் ஒன்றிணைந்து பணியாற்றுவார்கள். உங்கள் நோய், சிகிச்சை மற்றும் கவனிப்பு முறை குறித்து எங்கள் குழு உங்களுக்கு விளக்கமளித்து, கற்றுக்கொடுத்து மற்றும் ஆலோசனை வழங்கும். உங்களுக்கு ஏதேனும், உதவி தேவைப்பட்டால் எங்கள் ஊழியர்களை அணுகவும்.

**சேவைகளின் சுருக்கம்:**

<u>மருத்துவ சேவைகள் (Clinical)</u>

- போதை பழக்க அடிமை மருத்துவம் (Addiction Medicine)
- சமூக மனநல மருத்துவம் (Community Psychiatry)
- வளர்ச்சி மனநல மருத்துவம்
- ஆரம்பக் கால மனநோய் சீர்ப்படுத்துவதற்கான தலையீடு (Early Psychosis Intervention)
- அவசர நிலை மற்றும் நெருக்கடி உதவி (Emergency and Crisis Care)
- சட்டம் சார்ந்த மனநல மருத்துவம் (Forensic Psychiatry)
- பொது மனநல மருத்துவம் (General Psychiatry)
- முதியோர் மனநல மருத்துவம் (Geriatric Psychiatry)
- மருத்துவ பராமரிப்பு சேவைகள் (Medical Care Services)
- மனநிலை மற்றும் பதட்டம் (Mood & Anxiety)
- மீட்பு பராமரிப்பு (Recovery care)
- மறுசீரமைப்பு சேவை (Rehabilitation Service)

<u>இதர சுகாதாரம் (Allied Health)</u>

- மருத்துவ வழக்கு நிர்வாகம் (Case Management)
- மருத்துவ சமூக பணி (Medical Social Work)
- தொழில் துறை சிகிச்சை (Occupational Therapy)
- மருந்தகம் (Pharmacy)
- உடலியக்க சிகிச்சை (Physiotherapy)
- உளவியல் மருத்துவம் (Psychology)

<u>மற்ற சேவைகள்(Others)</u>

- பல் மருத்துவ சேவை (Dental Services)
- நோயறிதல் பரிசோதனைக் கூடச் சேவைகள் (Diagnostic Laboratory Services)
- ஊடுகதிர் சேவைகள் (X-ray services)

(குறிப்பு: இவை வெளிப்புற ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படும் சேவைகள்)

10 Buangkok View, Singapore 539747
Tel: (65) 6389 2000 Fax: (65) 6389 1050 Business Registration No. 52930996C
www.imh.com.sg

**பார்வையாளர் நேரம் (Visiting Hours)**

| | | |
|---|---|---|
| பொதுவான வார்டுகள், மற்றும் 80A/80B மருத்துவ/தனிமைப்படுத்தல் பிரிவுகள் (General Wards) | தினமும் | மதியம் 12 மணி முதல் – மதியம் 2 மணி வரை<br>மாலை 5 மணி முதல் – மாலை 7 மணி வரை |
| உயர் சார்பு மனநல பராமரிப்பு பிரிவு (HDPCU) | தினமும் | காலை 11.30 மணி முதல் – மதியம் 1.30 மணி வரை<br>மாலை 5 மணி முதல் – மாலை 7 மணி வரை |
| சட்டக்காவல் சார்ந்த வார்டுகள் (நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டும்)<br>Forensic Wards (for immediate family members only) | | |
| 70B நீண்ட கால சட்டக்காவல் சார்ந்த வார்டு | செவ்வாய் மற்றும் சனி | மதியம் 2.30 மணி முதல் – மதியம் 3.30 மணி வரை |
| 70B கடுமையான சட்டக்காவல் சார்ந்த வார்டு | சனி மட்டும் | |
| 75A/B நீண்ட கால சட்டக்காவல் சார்ந்த வார்டு | புதன் மற்றும் ஞாயிறு | |
| 75A/B கடுமையான சட்டக்காவல் சார்ந்த வார்டு | ஞாயிறு மட்டும் | காலை 10 மணி முதல் – காலை 11 மணி வரை |

**கிளினிக் (இயங்கும்) நேரங்கள் (Clinic Hours)**
**(அனைத்து மருத்துவ சந்திப்புக்களுக்கும் முன்பதிவு செய்யவேண்டும்)**

| | |
|---|---|
| சாயாங் வெல்னஸ் கிளினிக் (SWC)<br>10 புவாங்காக் வியூ, புளோக் 1, மாடி 2, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 | திங்கள் முதல் வியாழன் வரை: காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை<br><br>வெள்ளி: காலை 8 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| கிளினிக் B<br>10 புவாங்காக் வியூ, புளோக் 1, மாடி 1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 | |
| நெஷ்னல் எடிக்ஷன் மெனஜ்மண்ட் சர்வீஸ் (NAMS) கிளினிக்<br>10 புவாங்காக் வியூ, புளோக் 9, மாடி B1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 | |
| சைல்டு கைடன்ஸ் கிளினிக் (CGC) - சன்ரைஸ் விங்க் (Sunrise Wing<br>10 புவாங்காக் வியூ, புளோக் 3, மாடி B1, சிங்கப்பூர் 539747<br>தொலைபேசி எண்: 63892200 | |
| சைல்டு கைடன்ஸ் கிளினிக் (CGC) – ஹெல்த் புரோமோஷன் போர்டு (HPB)<br>3 ஹோஸ்பிட்டல் எவன்யூ, #03-01, சிங்கப்பூர் 168937<br>தொலைபேசி: 63892200 | |

| | |
|---|---|
| கம்யூனிட்டி வெல்னெஸ் கிளினிக் (CWC) – Queenstown<br>580 ஸ்டர்லிங் ரோடு, குவீன்ஸ்டவுன் பலதுறை மருந்தகம்,<br>மாடி 4, சிங்கப்பூர் 148958<br>தொலைபேசி: 63892200 | திங்கள், செவ்வாய் & வியாழன்:<br>காலை 8 மணி முதல் மாலை 5.30 வரை<br><br>புதன்: காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணி வரை<br><br>வெள்ளி: காலை 8 மணி முதல் மாலை 5 வரை |
| கம்யூனிட்டி வெல்னெஸ் கிளினிக் (CWC) – Geylang<br>21 கேலாங் ஈஸ்ட் சென்ட்ரல், கேலாங் பலதுறை மருந்தகம்,<br>மாடி 4, சிங்கப்பூர் 389707<br>தொலைபேசி: 63892200 | திங்கள், செவ்வாய், வியாழன் & வெள்ளி:<br>காலை 8 மணி முதல் மாலை 5 வரை<br><br>புதன்: காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணி வரை |

**எங்களை தொடர்புக் கொள்ள:**

| | |
|---|---|
| வெளி மருந்தக சந்திப்பு முன்பதிவு<br>திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை | தொலைபேசி எண்: 63892200<br>மின்னஞ்சல் முகவரி: imh.appt@nhghealth.com.sg<br>மின் படிவம்: https://form.gov.sg/682c0311cafc2335c3eaf2c6 |
| பொதுவான தகவல்களுக்கு<br>(24 மணி நேர சேவை) | தொலைபேசி எண்: 63892000<br>மின்னஞ்சல் முகவரி: imh.enquiry@nhghealth.com.sg |
| கட்டணம் பற்றிய தகவல்களுக்கு<br>திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை) | தொலைபேசி எண்: 64078128 |
| மருத்துவ பதிவேடு அலுவலகம்<br>திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை) | தொலைபேசி எண்: 6389 2031<br>மின்னஞ்சல் முகவரி: imh.mro@nhghealthimh.com.sg |
| நோயாளிகள் உறவுகள் அலுவலகம்<br>தரமான சேவை<br>திங்கள் – வியாழன்<br>(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)<br>வெள்ளி (காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை) | தொலைபேசி எண்: 6389 1918<br>மின்னஞ்சல் முகவரி: imh.qsm@nhghealth.com.sg |
| நேஷனல் மைன்ட்லைன் 1771 (24 மணி நேர சேவை)<br>24/7 மனநல ஆதரவிற்கு, நீங்கள் தேசிய மனநல உதவி எண் 1771-ஐத் தொடர்பு கொள்ளலாம் | உதவி எண்: 1771<br>வாட்ஸ்அப்: 6669-1771 |

எங்கள் மருத்துவமனையில் நடத்தப்படும் பின்வரும் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகளை கவனத்தில் கொள்ளவும்:

- உங்களுக்கு தேவையான சிகிச்சைக்கும் பரிசோதனைக்கும் உங்களிடம் ஒப்புதல்

கேட்கப்படும். ஆனால், உங்களுடைய மனநிலை ஒப்புதல் தெரிவிப்பதற்கு தடையாக இருந்தால், சிங்கப்பூர் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட விதிமுறைப்படி உங்கள் உறவினரோ அல்லது சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ உங்கள் சார்பாக ஒப்புதல் அளிக்கலாம்.

- மன நல (கவனிப்பும் சிகிச்சையும்) சட்டம் 2008ன் கீழ் மனநல கழகம் அரசிதழ் பதிவுப்பெற்றது. இந்த சட்டம், மனநலக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவர் தனக்கோ அல்லது மற்றவருக்கோ ஆபத்து விளைவிக்க கூடியவர் என்று நியமிக்கப்பட்ட மருத்துவரால் மதிப்பிடப்பட்டால் அவரை இந்த சட்டத்தின் கீழ் கட்டாய உள்நோயாளி சிகிச்சைக்காக இந்த மருத்துவமனையில் தடுத்து வைக்க முடியும். இம்மாதிரியான அனுமதி கட்டாய அனுமதியாகும். சிகிச்சைக்காக தடுத்து வைத்திருக்கும் காலமும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும். இவர்களுக்கான சிகிச்சையும் பராமரிப்பும் தானாகமுன்வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் பிற நோயாளிகளைப் போலவே இருக்கும்.

- எங்கள் மருத்துவமனையில் மருத்துவ ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகிறது. அதில் பங்கேற்க நீங்களும் அழைக்கப்படலாம். அத்தகைய சோதனைகள் அனைத்தும் NHG ஹெல்த் துறைசார்ந்த வரையறைக்குட்பட்ட மதிப்பீட்டுக் கழகத்தினால் (Domain Specific Review Board) தணிக்கைச்செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவை. நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், உங்கள் தகவலறிந்த ஒப்புதலைப் பெறுவோம். நீங்கள் எந்த நேரத்திலும் எந்தவொரு ஆராய்ச்சியிலும் பங்கேற்க மறுக்கலாம் அல்லது பாதியில் இருந்து விலகிக்கொள்ளலாம். இதனால், மருத்துவமனையில் உங்கள் சிகிச்சையும் பராமரிப்பும் பாதிக்கப்படாது.

- மருத்துவ மாணவர்களுக்கும், மனநல மருத்துவர்களுக்கும், தாதியருக்கும், மனோதத்துவ நிபுணர்களுக்கும், மருந்தாளர்களுக்கும் , மருத்துவ சமூகசேவை ஊழியர்களுக்கும், தொழில் துறை சிகிச்சை செய்பவர்களுக்கும் மற்றும் மனநல ஆலோசர்களுக்கும் மனநல கழகம் ‘கற்பித்தல் மருத்துவமனை'-யாக சான்றிதல் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நீங்கள் இங்கு வருகை தரும் போது, வார்டுகள் அல்லது கிளினிக்களில் அவர்களை நீங்கள் சந்திக்க நேரிடும். இருப்பினும், அவர்களின் பயிற்சியில் நீங்கள் பங்கேற்பது உங்கள் வாய்மொழி ஒப்புதலுக்கு உட்பட்டது.இந்த பயிற்சியில் நீங்கள் பங்கேற்க வேண்டாம் என்று முடிவு செய்தால், உங்கள் பராமரிப்பு மற்றும் சிகிச்சை பாதிக்கப்படாது.

மனநல கழகத்தின் முக்கியமான முன்னுரிமையும் ஈடுபாடும் உங்களுக்கு உயர்ந்ததரமான மருத்துவ சேவை வழங்குவதே. இதில் ஏதும் குறைபாட்டை நீங்கள் உணர்ந்தால் எங்களது மருத்துவ குழுவிடம் தெரிவிக்கவும். உங்களது கருத்துக்களும் விளக்கங்களும் எங்களுக்கு மிகவும் முக்கியம், அவை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

நன்றி

Dr Jamie Mervyn Lim
தலைமை நிர்வாகி (Chief Executive Officer)
மனநல கழகம் (Institute of Mental Health)

(Rev.10) இந்த ஆவணம் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. இரண்டு வடிவங்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால், ஆங்கில பதிப்பு நிலவும்.